**கோட்டக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம், நல்லூர்**

**இரண்டாம் தவணைப் பரீட்சை – 2015**

**தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்**

தரம் : 10 நேரம் : 3 மணித்தியாலம்

## பகுதி I

➢ சரியான விடையைத் தெரிவு செய்க.

1. தரப்பட்ட வரிப்படமானது தரவு எவ்வாறு செயற்படுத்தப்படுகின்றது என்பதனைக் காட்டுகின்றது. இடைவெளிக்குப் பொருத்தமானதைத் தெரிவு செய்க.

ATM Card → ATM Machine → Name, Account Number Balance, Withdrawal of cash

தரவு -------------------- தகவல்

1. பதிவு 2. முறைவழிப்படுத்தல் 3. செய்நிரல் 4. பதியி

2. பின்வருவனவற்றுள் எது பண்பறி தகவலின் இயல்பு அல்லாதது?
1. பொருத்தம் 2. எல்லா அம்சங்களும் பூரணமாக இருத்தல்
3. காலத்திற்குப் பொருத்தமானதாக இருத்தல் 4. செம்மையின்மை

3. மூன்றாம் தலைமுறைக் கணனிகளில் பயன்படுத்தப்பட்ட பிரதான தொழில்நுட்பம் யாது?
1. வெற்றிடக்குழாய்கள் 2. நுண்முறைவழியாக்கி
3. திரான்சிஸ்டர்கள் 4. ஒருங்கிணைந்த சுற்றுக்கள்

Education கல்வி

4. அபிவிருத்தி அடைந்த நாடுகளில் விவசாயத்திற்கு நவீன தொழினுட்பங்கள் பல பயன்படுத்தப் படுகின்றன. பின்வருவனவற்றுள் எது விவசாய நவீன தொழினுட்பவியலில் பயன்படுத்தப் படுவதில்லை?
1. தன்னியக்கக் களையகற்றும் பொறி 2. தன்னியக்கமுறையாக நீர் வழங்கல்
3. காந்தப்பதிவு விம்பமாக்கற் பொறி 4. வானிலை அளவீட்டுப்பொறி

5. உலகின் முதலாவது கணனி நிகழ்ச்சித்திட்டத்தைத் தயாரித்தவர் யார்?.
1. பில் கேட்ஸ் 2. யோசப் யக்குவேட்
3. சாள்ஸ் பபேஜ் 4. லேடி அடா அகஸ்டா லவ்லேஸ்

6. பின்வருவனவற்றுள் அளவிற்கேற்ப கணனி வகைப்படுத்தலில் சரியானது எது?
1. மீக்கணினிகள், பெருமுகக்கணினிகள், நுண்கணினிகள், சிறுகணினிகள்
2. மீக்கணினிகள், உள்ளங்கைக் கணினிகள், சிறுகணினிகள், நுண்கணினிகள்
3. மீக்கணினிகள், பெருமுகக்கணினிகள், சிறுகணினிகள், நுண்கணினிகள்
4. பெருமுகக்கணினிகள், சிறுகணினிகள், மீக்கணினிகள், நுண்கணினிகள்

7. பின்வருவனவற்றுள் அழிவுறா நினைவகங்கள் எவை?
a. வாசிப்பு மட்டும் நினைவகம் b. நினைவக பதிவகங்கள் c. பளிச்சீட்டு செலுத்தி
d. தற்போக்குப் பெறுவழி நினைவகம் e. பதுக்கு நினைவகம்
1. a, b, e மட்டும் 2. b, d, e மட்டும் 3. c, d மட்டும் 4. a, c மட்டும்


8. காசோலையில் உள்ள செம்மையைச் சோதிப்பதற்கு அதாவது காசோலையின் கீழ்ப்பகுதியில் உள்ள எண்களை வாசிப்பதற்கு............................ சாதனம் பயன்படுத்தப்படுகின்றது.
1. ஒளியியல் வரியுரு கண்டறிதல் (OCR) 2. காந்த மை வரியுரு வாசிப்பான் (MICR)
3. தன்னியக்க காசளிப்பு இயந்திரம் (ATM) 4. ஒளியியல் குறி கண்டறிதல் (OMR)



kalvi.lk

9. பின்வருவனவற்றுள் எது திண்மநிலைத் துணைத்தேக்க சாதனம் ஆகும்?
   1. Floppy Disk  2. Blue-ray Disk  3. Memory Card  4. Magnetic Tape

10. 1 தொடக்கம் 4 வரை முகப்பு அடையாளமிடப்பட்ட கணினியின் துறைகளை (Ports) இனங்காண்க.







   1. PS/2 ports, Serial port, Audio ports, Video port
   2. USB Port, Serial port, PS/2 ports, Video port
   3. PS/2 ports, Parallel port, Audio ports, Video port
   4. PS/2 ports, Parallel port, Audio ports, Serial port




11. மடிக்கணினி மற்றும் தனியாள் கணினிகள் எவ்வகைக் கணினிகளுக்குள் வகைப்படுத்தப்படுகின்றன?
   1. மீக்கணினிகள்  2. நுண்கணினிகள்
   3. சிறுகணினிகள்  4. பெருமுகக்கணினிகள்


12. பின்வருவனவற்றுள் கணினியின் சிறப்பியல்பாக அமையாதது எது?
   1. தேக்கி வைப்பதற்கும், மீட்டலுக்குமான ஆற்றல்  2. சிந்திக்கும் ஆற்றல்
   3. பல்திறமை  4. செம்மை

13. பின்வருவனவற்றுள் அதிகூடிய தரவு ஊடுகடத்தல் ஊடகம் எது?

1.  2.  3.  4. 

14. பின்வருவனவற்றில் எது உடுவடிவ வலையமைப்பாக்கல் ஆகும்?

1.  2.  3. 

4. 

15. பின்வருவனவற்றுள் எது $162_{10}$ எனும் பதின்ம எண்ணிற்கு சம வலுவற்றது?
   1. $10100010_2$  2. $A2_{16}$  3. $10100110_2$  4. $242_8$

16. 0.0162 எனும் எண்ணில் அதிக மதிப்புறுபெறுமானமும் (MSD) குறைந்த மதிப்புறு பெறுமானமும் (LSD) முறையே
   1. 0, 0  2. 1, 2  3. 0, 1  4. 0, 2

17. பின்வருவனவற்றுள் எது அதி குறைந்த பெறுமானம் உடையது?
   1. $43_{10}$  2. $101100_2$  3. $55_8$  4. $53_{10}$

18. $110111_2$ இற்கு சமவலுவான பதின்ம எண் யாது?
   1. 56  2. 55  3. 27  4. 54

19. ASCII குறியீட்டு முறையில் 'E' எனும் வரியுரு $1000101_2$ என வகைகுறிக்கப்பட்டால் 'L' எனும் வரியுருவை ASCII குறியீட்டு முறையில் வகைகுறிப்பது எது?
   1. $1001101_2$  2. $1001100_2$  3. $1001011_2$  4. $1001010_2$

20. $1111_2 + 111_2 =$
   1. $10111_2$  2. $10110_2$  3. $11100_2$  4. $11110_2$




kalvi.lk

21. பின்வருவனவற்றுள் அதிகுறைந்த கோப்பு அளவைக் கொண்டுள்ளது எது?
   1. .doc file of 1Kilo Bytes   2. .txt file of 52 Bytes
   3. .jpg file of 26 Mega Bytes   4. .xls file of 1024 Bytes


22. தேக்கச்சாதனங்களைக் கொள்ளளவு அடிப்படையில் ஏறுவரிசையில் தருவது பின்வருவனவற்றுள் எது?
   1. Register, Cache, CD, DVD, RAM, Hard Disk   2. CD, DVD, Register, Hard Disk, ROM
   3. RAM, ROM, Register, Hard Disk, CD   4. Hard Disk, RAM, DVD, CD, Cache, Register

23. பின்வரும் மெய் அட்டவணையைக் கருதுக. இவ் அட்டவணையில் குறியீடு (Q) இனால் பிரதிநிதித்துவம் செய்யப்படும் தர்க்கச் செய்பணி எது?

| A | B | Q |
|---|---|---|
| 0 | 0 | 1 |
| 0 | 1 | 0 |
| 1 | 0 | 0 |
| 1 | 1 | 0 |


   1. XOR   2. NOR
   3. AND   4. NAND





24. பின்வரும் தர்க்கச் சுற்றின் வருவிளைவு யாது?





   1. $\overline{A}C+AB+\overline{C}$   2. $AC+AB+\overline{C}$
   3. $A\overline{C}+\overline{A}B$   4. $A\overline{C}+\overline{A}B+\overline{C}$

25. தரப்பட்ட மின்சுற்றுக்குப் பொருத்தமான தர்க்க வாயில் எது?




1. 
2. 
3. 
4. 

26. கீழே தரப்பட்ட தொடுகையிடுஞ்சுற்றில் (IC) முனை 6 = 0 எனில் முனை 4 மற்றும் முனை 5 ஆகியவை யாதாயிருக்கும்?




   1. 0, 0   2. 0, 1   3. 1, 0   4. 1, 1

27. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
   A- வன்பொருள் என்பது கணினியின் மூலமாகக் குறிப்பிட்ட பணியை மேற்கொள்ளத் தேவையான அறிவுறுத்தல்களின் திரட்டு.
   B- மென்பொருள் என்பது கணினி முறைமையின் பௌதிகக் கூறாகும்.
   C- நிலைபொருள் என்பது முறைமையை ஆரம்பிப்பதற்குப் (Boot up) பயன்படுத்தப்படுகின்றது.

   இவற்றுள் சரியானது / சரியானவை எது அல்லது எவை?
   1. A, B மட்டும்   2. B மட்டும்   3. C மட்டும்   4. A, B, C எல்லாம்

28. ஒரு நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பயனர்களால் கணினியில் தொழிற்பாடுகளை மேற்கொள்ளக்கூடிய பணிச்செயல்முறைமை ........................... எனப்படும்
   1. பல்கொள்பணி பணிச்செயல்முறைமை (Multi tasking Operating System )
   2. பல்பயன்பாட்டு பணிச்செயல்முறைமை (Multi user operating System )
   3. நிகழ்நேர பணிச்செயல்முறைமை (Real Time Operating System)
   4. தனிப்பயன்பாட்டு பணிச்செயல்முறைமை (Single user Operating System)



kalvi.lk

29. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A. Apple Mac ஆனது பதிப்புரிமை கொண்ட பணிச்செயல்முறைமை ஆகும்.

B. Hanthana Linux ஆனது திறந்த மூல பணிச்செயல்முறைமை ஆகும்.

C. Microsoft Windows பதிப்புரிமை கொண்ட பணிச்செயல்முறைமை ஆகும்.

பின்வருவனவற்றுள் சரியானது / சரியானவை எது அல்லது எவை?

1. A, B மட்டும் 2. B மட்டும் 3. C மட்டும் 4. A, B, C எல்லாம்

30. பின்வருவனவற்றுள் எது அல்லது எவை பணிச்செயல்முறைமைகளில் பயன்படுத்தப்படும் கோப்பு வகை (File System Type) ஆகும்?

a) Exe b) FAT32 c) NTFS d) accdb

1. a ,b, c மட்டும் 2. b, c மட்டும் 3. a, c மட்டும் 4. a, d மட்டும்


31. கணினியில் பௌதிக ரீதியாகக் காணப்படும் ஒரு வன்வட்டினைத் தருக்க ரீதியான பல பாகங்களாகப் பிரித்து வேறாக்குதல் …………………….. எனப்படும்.

1. வன்வட்டு வடிவமைத்தல் 2. வட்டுப் பிரிவிடல்
3. துண்டாக்கல் 4. வட்டு தூய்மையாக்கல்

32. பின்வருவனவற்றுள் எது சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளின் கோப்பு நீட்சியாகக் கருதப்பட முடியாதது?

1. .doc 2. .odt 3. .docx 4. .xls

33. பின்வருவனவற்றுள் எது பந்தி ஒன்றின் உள்தள்ளலை அதிகப்படுத்த உதவும் கருவி ஆகும்?

1.  2.  3.  4. 

34. 'There are many ways the COMPUTER and the internet are used for education in the classroom'.

பின்வருவனவற்றுள் எந்த வடிவமைப்பு "COMPUTER" எனும் சொல்லிற்குப் பயன்படுத்தப் பட்டுள்ளது?


1. Emboss 2. All caps 3. Outline 4. Small caps

35. கீழே தரப்பட்ட A எனும் வாக்கியம் சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளைப் பாவித்து வடிவமைக்கப்பட்டு B எனும் தோற்றத்தைப் பெற்றுள்ளது.


A. You can contact with a teacher/trainer via internet. This is called WBT (Web based Training).

B. **You can contact with a teacher/trainer via internet. This is called WBT (Web based Training).**

A யிலிருந்து B ஐப் பெறுவதற்குப் பயன்படுத்திய கருவிகள் பின்வருவனவற்றுள் எது?

1.  and  2.  and  3.  and  4.  and 

36. பின்வரும் முகப்பு அடையாளமிடப்பட்டவற்றுள் சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளில் 'Paste' இற்குப் பயன்படுத்தப்படும் கருவி யாது?




1. முகப்பு 1 2. முகப்பு 2
3. முகப்பு 3 4. முகப்பு 4

37. பின்வருவனவற்றில் சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளாகக் கருதப்பட முடியாதது?

1. Kingsoft Office Writer 2. AbiWord 3. iWork Pages 4. LibreofficeCalc



kalvi.lk

தமிழ்சாதி - 451

38. சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளில் ஆவணங்களைத் தயாரிக்கும்போது நாம் பயன்படுத்தும் சொற்களுக்கு ஒத்த கருத்துக்களையுடைய வேறு சொற்களைப் பெறுவதற்கு .............................. பயன்படுத்தப்படுகிறது.
1. Find and Replace 2. Thesaurus 3. Mail Merge 4. Word Count

39. சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளில் பின்வரும் எக்கருவியானது ஒரு பந்தியின் ஆரம்ப எழுத்தினைப் பெரிய எழுத்தில் வடிவமைக்கப் பயன்படுகிறது?
1. Text Box 2. WordArt 3. Drop Cap 4. Shapes

40. சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளில் Landscape மற்றும் Portrait ஆனது.
1. Page Layout 2. Margins 3. Columns 4. Page Orientation

(40x1=40 புள்ளிகள்)

## பகுதி II

➢ **முதலாம் வினாவும் வேறு 4 வினாக்களும் உட்பட 5 வினாக்களுக்கு விடை தருக.**

**(1)**

1. "ஒரு நோயாளி பற்றித் தவறான தகவல்களை ஒரு மருத்துவரிடம் வழங்கினால் நோயாளிக்கு ஆபத்தாக இருக்கலாம். சரியான தகவல்கள் வழங்கப்படவேண்டும்." மேற்தரப்பட்ட கூற்றின் மூலம் பண்பறி தகவலின் எவ் இயல்பானது வெளிப்படுத்தப் படுகின்றது?

2. கீழே தரப்பட்ட A, B ஆகிய இரு நிரல்களையும் உங்கள் விடைத்தாளில் பிரதி செய்து நிரல் A யில் உள்ள ஒவ்வொன்றிற்கும் பொருத்தமானதை நிரல் B யில் தெரிவு செய்து அம்புக்குறி மூலம் இணைக்குக.

| Column A |
|---|
| இலத்திரனியல் அரசாங்க சேவைகள் |
| ஒத்திசைக் கணினி |
| பணிச்செயல்முறைமை |
| வலையமைப்பாக்கம் |

| Column B |
|---|
| Mesh |
| G2B |
| Apple Macintosh |
| Speedometer |

3. விலங்குகளைக் கணக்கிடுதல், இனங்காணல், அவை இருக்கும் பிரதேசத்தை அறிதல் ஆகியவற்றிற்குப் பயன்படுத்தப்படும் உபகரணம் யாது?

4. தரப்பட்ட அட்டவணையானது மையமுறைவழியாக்க அலகின் பிரதான பகுதிகளையும் அவற்றின் பிரதான செயற்பாடுகளையும் காட்டுகின்றது. பிரதான பகுதிகளான A, B, C இனைக் காண்க.

| பிரதான பகுதி | செயற்பாடு |
|---|---|
| A | கணினித் தொகுதியின் எல்லா உத்திகளும் கட்டுப்படுத்தப்படுகின்றன. |
| B | முறைவழிகளுக்குத் தேவையான தரவுகள் தற்காலிகமாக வைத்திருக்கப்படுகின்றன. |
| C | எல்லா வகை எண்கணித, தர்க்கச் செயல்கள் நடைபெறுகின்றன. |

5. அழுத்தும் அச்சுப்பொறிக்கு 2 உதாரணங்கள் தருக.


6. பதினறும எண் $ABC_{16}$ இற்கு சமவலுவான இரும எண்ணைக் காண்க. கணித்தலைக் காட்டவும்.



kalvi.lk


7. கணினிகளில் தரவுகளை எடுத்துக்காட்ட ஒற்றைக்குறிமுறை (UNICODE) யைப் பயன்படுத்தி எத்தனை வழி இயல்புகளை வகைகுறிக்க முடியும்?

8. பின்வரும் தர்க்கச் சுற்றின் பூலியன் கோவையினைத் தருக.




9. கையடக்கச் சாதனங்களுக்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட பணிச்செயல்முறைமை ஒன்று தருக?

10. தரப்பட்ட படமானது சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளில் அடிக்கடி பயன்படுத்தப்படும் Home Ribbon இனைக் காட்டுகின்றது. பின்வரும் 5, 17, 14 மற்றும் 12 முகப்பு அடையாளங்களினால் குறிக்கப்படும் கருவிகளின் தொழிற்பாடுகளைத் தனித்தனியாக எழுதுக.





| முகப்பு அடையாளம் | தொழிற்பாடு |
|---|---|
| 5 | |
| 17 | |
| 14 | |
| 12 | |

(10x2=20 புள்ளிகள்)

**( 2 )**

i ) வன்வட்டு பல பகுதிகளைக் கொண்டுள்ளது பின்வரும் அட்டவணையைக் கொண்டு அவற்றின் தொழிற்பாட்டிற்குப் பொருத்தமான பகுதியின் பெயரைத் தருக.










kalvi.lk

| முகப்பு அடையாளம் | தொழிற்பாடு | பகுதியின் பெயர் |
|---|---|---|
| A | நினைவகத் தட்டை வைத்துக்கொண்டு சுழலச் செய்கின்றது | |
| B | உலோகத் தட்டாக இருக்கும் அதேவேளை இதன் இரு பக்கங்களிலும் தரவுகளைத் தேக்கி வைப்பதற்கான ஆற்றல் உண்டு. | |
| C | தலைதூண்டிப் புயத்தின் மூலம் அங்கும் இங்கும் அசைக்கப்படுகின்றது. | |
| D | வன்வட்டின் தொழிற்பாட்டிற்குத் தேவையான மின்வலுவைத் தொடுக்கின்றது. | |
| E | நினைவகத்தட்டிற்குத் தரவுகளைப் பரிமாறுகின்றது | |
| F | இதனுடன் தொடுக்கப்பட்டுள்ள புயத்தை அங்கும் இங்கும் கொண்டு செல்லும் மின் அங்கமாகிய இது மோட்டாரின் மூலம் செயற்படுத்தப்படுகின்றது. | |

(6 x ½ = 3 புள்ளிகள்)

ii) பின்வரும் அட்டவணையானது சில கணினிச் சாதனங்களைக் காட்டுகின்றது. இவை உள்ளீட்டுச் சாதனமா? வெளியீட்டுச் சாதனமா? உள்ளீடு மற்றும் வெளியீட்டுச் சாதனமா? அல்லது துணைத் தேக்கச்சாதனமா? என இனங்கண்டு பொருத்தமான கூட்டினுள் (X) புள்ளடி இடுக.

| | | உள்ளீட்டுச் சாதனம் | வெளியீட்டுச் சாதனம் | உள்ளீடு மற்றும் வெளியீட்டுச் சாதனம் | துணைத் தேக்கச் சாதனம் |
|---|---|---|---|---|---|
| 1. |  | | | | |
| 2. |  | | | | |
| 3. |  | | | | |
| 4. |  | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5. |  | | | | |
| 6. |  | | | | |
| 7. |  | | | | |

(7x1=7 புள்ளிகள்)

**(3)**

I ) 1) தரப்பட்ட இரும எண் $100111_2$ ஐப் பதின்ம எண்ணாக மாற்றுக.

2) தரப்பட்ட எண்ம எண் $745_8$ ஐ இரும எண்ணாக மாற்றுக.


(2x1=2 புள்ளிகள்)

II)

மோட்டார் வாகன உதிரிப்பாக உற்பத்தியாளர்களினால் மோட்டார் வாகன என்ஜின் செயற்படாத சந்தர்ப்பத்தில் வாகனத்தில் அசைவு அல்லது கண்ணாடிக்குப் பாதிப்பு ஏற்பட்டால் சமிக்ஞை ஒலியை எழுப்பக்கூடிய பாதுகாப்புச் சுற்று முறைமை உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கென மோட்டார் வாகன என்ஜின் இயங்கும்போது மட்டும் வருவிளைவு 1 ஆக அமையக்கூடிய உணரியும் கண்ணாடிக்குப் பாதிப்பு ஏற்படும்போது மட்டும் வருவிளைவு 1 ஆக அமையக்கூடிய உணரியும் வாகனம் இயங்கும்போது மட்டும் வருவிளைவு 1 ஆக அமையக்கூடிய உணரியும் பயன்படுத்தப்படும்.

இந்தச் சுற்று அடிப்படைத் தர்க்க வாயில்கள் மூன்றைப் பயன்படுத்தி அமைக்கப்பட்டுள்ளது. இவற்றுள் ஒன்று NOT வாயிலாகும். ஏனைய வாயில்கள் இரண்டும் வெற்றுக்கூட்டினைக் கொண்டுள்ளது. இதற்குப் பொருத்தமான தர்க்க வாயில்கள் யாவை?

a) இந்த வாயில்களைப் பயன்படுத்தி சுற்றினை மீண்டும் வரைக.




b) தரப்பட்ட சுற்றிற்குரிய உண்மை அட்டவணையை அமைக்குக.


(2x4=8 புள்ளிகள்)



kalvi.lk

நல்லூர் -01- 458 தமிழ்

(4) பின்வரும் படமானது பயனருக்கும் கணினிக்கும் இடையிலான தொடர்பைக் காட்டுகின்றது. இப்படத்தினைக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.




கணினி முறைமை மாதிரி

System Software – முறைமை மென்பொருள்

i) மேலுள்ள வரிப்படத்தில் A , B இனை இனம் காண்க.

ii) A இற்கு 2 உதாரணங்கள் தருக.

iii) B இற்கு 2 உதாரணங்கள் தருக.

iv) முறைமை மென்பொருளின் பிரதான 3 வகையினையும் தருக.

v) பயன்பாட்டு மென்பொருளுக்கு உதாரணம் ஒன்று தருக.

(2+2+2+3+1=10 புள்ளிகள்)

(5)

i) தரவு ஊடுகடத்தப்படும் முறையினை ஒவ்வொரு உதாரணத்துடன் தருக.

ii) வானொலி அலைகளுக்கு 2 உதாரணங்கள் தருக.

iii) ஆளியிற்கும் குவியத்திற்குமிடையிலான பிரதான வேறுபாடுகளைத் தருக.

iv) கீழே தரப்பட்ட சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமான வலையமைப்பு வகையினைத் தருக.

| சந்தர்ப்பம் | வலையமைப்பு வகை |
|---|---|
| இணையம் | |
| பல்கலைக்கழகம் | |
| வங்கி வலையமைப்புகள் | |

(3+2+2+3=10 புள்ளிகள்)



kalvi.lk

(6) அப்சரா சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளைப் பயன்படுத்தி தனது செயற்றிட்டத்தினை தட்டச்சுச் செய்கின்றாள். கீழே தரப்பட்ட படமானது அப்சராவினது செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாகும்.

***Higher education for everyone*** A B

With the development of Information and Communication Technoogy, today a person from any country can connect with a university or any other learning center of his choice and pursue higher education at a considerably low cost.

This is called Online Distance Learning.

Features of Distance Learning:

- No daily time tables, provide the facility to learn at your convenience.
- Digital library facility on joining a course.
- Online assignments and quizzes.
- Contact with a teacher online.
- Easy to obtain teacher consultations.

C


The ability to use the learning units at anytime and anywhere at school, at home or any other convenient place.

Refer: http://www.e-thaksalawa.moe.gov.lk/ D

**Learning Management**

In many countries it has become a common practice to use a Learning Manage the System (LMS) to manage school system or higher education system. We need an internet connection to link with the LMS.

~~Some services provided by Learning Management System~~ E



i. A என முகப்பு அடையாளமிடப்பட்ட தலைப்பினை உருவாக்கப் பயன்படுத்தப்பட்ட கருவிகள் யாவை?

ii. C என முகப்பு அடையாளமிடப்பட்டதை உருவாக்கப் பயன்படுத்தப்பட்ட கருவி யாது?

iii. முதலாவது பந்தியின் நேர்ப்படுத்தல் வகை எது?

iv. B என முகப்பு அடையாளமிடப்பட்ட சொல்லில் உள்ள பிழையினைத் திருத்துவதற்குரிய படிமுறையினைத் தருக.

v. D என முகப்பு அடையாளமிடப்பட்ட இணைய முகவரியிற்கு மீயிணையினை உருவாக்கப் பின்பற்ற வேண்டிய படிமுறைகளைத் தருக.

vi. E என முகப்பு அடையாளமிடப்பட்ட வசனத்தில் பாவிக்கப்பட்ட Effect யாது?

(4+2+1+2+1=10 புள்ளிகள்)



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457